

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## "கிறிஸ்து பிறந்தார்" நற்செய்தி, இப்பாருலகம் அறியட்டும்!

எளிய மாட்டுத்தொழுவம், விண்ணவரை இந்த மண்ணுக்கு வரவழைத்ததே, நம் இரட்சிப்பின் நற்செய்தி! எப்படி? "நம் பாவம் மன்னிக்கப்படும் விடுதலை! திருமண விழாவில் 'இல்லை' என்ற குறை, ருசியுள்ள மதுரமாகிய விந்தை! ஏழ்மையான அப்பமும் மீனும், பல்லாயிர மக்களை திருப்திப்படுத்திய அற்புதம்!.... "இத்தனை நன்மைகள்" இப்பாருலக மக்களுக்கு சொந்த மன்றோ! இவ்வாறு, "முற்றிலும் நம்மை இரட்சித்திட" மன்னவன் இயேசு, நம்மைத் தேடி இந்த பூமிக்கு வந்ததே மாபெரும் இரட்சிப்பு! (எபி.7:25).

பலகோடி எளிய மக்கள் நடுவில் ஒருவராக வந்த விந்தையை மகிழ்ந்து, வானிலிருந்து இறங்கி வந்த தூதர்கள் "இந்த பூமியிலே அவர் தந்த சமாதானத்தையும்; மனுஷர்மேல் அவர் வைத்த பிரியத்தையும்" பாடி, கொண்டாடி மகிழ்ந்தனர்! அந்த புனித மகிழ்ச்சி நம் எல்லோர் இருதயத்திலும் தங்குவதாக! ஆமென்.

*-tr*

பெட்டகம் 39 டிசம்பர் 2023 பரல்கள் 12



## நல்ல அறுவடை பெற்ற ஓர் விவசாயிபோல!

இப்போது நமக்கு முக்கியமாய் இருப்பதெல்லாம், ஓர் வைராக்கிய ஆவியினால் நிறைந்து "தேவ சித்தம் செய்வதும்" "தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதுமே யாகும்!" தன் சிலுவை எடுத்து சுயத்திற்கு மரிப்பது போன்ற "ஆவிக்கேற்றபடி விதைப்பதற்கு" எவ்வளவு முடியுமோ, அவ்வளவு வேகமாய் செயல்படுவதேயாகும்! இவ்வாறு நீங்கள் செயல்பட்டுவிட்டால், **ஓர் வண்டி நிறைய தன் அறுவடை களஞ்சியத்தோடு வரும் விவசாயிக்கு ஒப்பாய், நீங்கள் கெம்பீரமாய் பரலோக இராஜ்ஜியம் பிரவேசித்து விடுவீர்கள்!**

தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் கிருபையை, நித்திய லாபமாய் கொடுத்தே தீருவார்! இதைக்குறித்து மற்ற ஜனங்கள் என்ன அபிப்பிராயம் கொள்கிறார்கள் என்பதெல்லாம் அவருக்குப் பொருட்டல்ல. அல்லது பிறர் நம்மை எவ்வளவு தீமையாய் பேசுகிறார்கள் ஆகிய யாதொன்றும் தேவனைப் பாதிப்பதே இல்லை. உங்கள் ஆவிக்குரிய 'விதைப்பையும்' அதற்கேற்ற பிரயாசத்தையும், கனி நிறைந்த அறுவடையுமே தேவன் எதிர்நோக்குகிறார்!

*-Ed*


**2024 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா ரூ.170/- ஆன்லைன் அல்லது **M.O.** மூலம் டிசம்பர் 10-ம் தேதிக்குள் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும். புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 9843049935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## 'உங்கள் சுமை நீங்கிட' கர்த்தரை நோக்கிப் பாருங்கள்

*சுமை நீங்கி வாழ விரும்பும் கர்த்தர்*

*சங்கீதம் 149:4-ம் வசனத்தில் "சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்" என்ற வசனத்தைப் பாருங்கள். மூல பாஷையில்* "**ஜெயத்தினால் முடிசூட்டி அலங்கரிப்பார்!**" *என்றே கூறப்பட்டுள்ளது. ஒரு வருடத்தின் ஓட்டத்திற்குரிய முடிவும் இவ்வாறாகவே நமக்கு இருக்க வேண்டும்!*

*சிறந்த பக்திமார்க்கத்தில் வாழ்ந்த ஒரு கிறிஸ்தவனுடைய தாய், எப்போதுமே கவலையும் துக்கமும் நிறைந்தவர்களாகவே இருப்பார்கள். தன் தாயைப் பராமரித்த அந்த அன்புள்ள மகனோ, தன் தாயை எப்படியாவது, ஓர் உயர்ந்த கிறிஸ்தவ வாழ்க்கைக்கு கொண்டுவர பிரயாசப்பட்டார். அதற்காகவே அதிக நேரம் செலவழித்து "அம்மா, உலக காரியங்களுக்காய் நீங்கள் எப்போதும் முறுமுறுத்து குறைசொல்லி, சந்தோஷமில்லாமல் வாழ்வது கொடிய பாவம் என்றே வேதம் கூறுகிறது" என்றெல்லாம் உணர்த்திக் கூறினாலும், அவனுடைய வயதான தாய் எதையும் விளங்கிக்கொள்ளாதவர்களாகவே இருந்தார்கள். ஒரு கதையில் சித்தரிக்கப்பட்ட பெண்மணியைப்போலவே "இந்த உலகிலுள்ள ஏராளமான பாடுகளை விட,* **இனி வரப்போகும் பாடுகளை நான் சிந்திக்கும்போதுதான் அதிகமாய் துன்பப்படுகிறேன்**" *எனக் கூறிய பெண்மணியைப்போல் அவனுடைய தாயார் இருந்தார்கள்!*

**அ***ன்று, ஓர் இனிய காலை நேரத்தில் எப்போதும் முக வாடலாய் இருக்கும் என் அம்மா, முகமெல்லாம் குதூகல மகிழ்ச்சியோடு தன் அறையிலிருந்து வெளியே வந்தார்கள். அப்போது அந்த மகன் தன் அம்மாவிடம் "அம்மா, நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்கிறீர்களே, எப்படி இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது?" என ஆர்வத்தோடு கேட்டார். அதற்கு அவனுடைய அம்மா "மகனே, இரவிலே நான் ஒரு கனவு கண்டேன்" என, கீழ்க்கண்டவாறு அந்தக் கனவைக் கூறினார்:*

*"மகனே, நான் ஒரு திரள் கூட்டத்தோடு ஓர் நீண்ட பாதையில் சென்று கொண்டு இருந்தேன். அந்த கூட்டத்தாரும்*

என்னைப்போலவே மிகுந்த சோர்வுடன் ஒரு கருப்பு சுமையை சுமந்து கொண்டு போவதைக் கண்டேன். அந்த கருப்பு மூட்டையை ‘அதிகார தொனியில்’ மக்களிடம் போட்ட தீய பிசாசுகள், அந்த மூட்டையை தூக்கிச் செல்லும்படி ‘கட்டாயப்படுத்தவும்’ செய்தார்கள். எல்லோரையும் போலவே நானும் இந்த பிசாசுகள் போட்ட மூட்டையை துக்கத்துடன் சுமந்து சென்றேன். **அச்சமயத்தில், என் கண்களை சற்று மேலே ஏறெடுத்துப் பார்த்தபோது** பிரகாசமான ஓர் தேவபுத்திரன், மலர்ச்சியான முகத்தோடு எல்லா ஜனங்களையும் சந்தித்து ஆறுதலும் புத்தியும் சொல்லிக்கொண்டே இருந்தார். அவரைப் பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில், என்னிடத்திலும் அவர் வந்தார்! அப்போதுதான், என்னிடத்தில் வந்தவர் ‘இரட்சகர்’ என்பதை அறிந்துகொண்டேன். நான் அவரிடம் குறைசொல்லும் தொனியில் “நான் வாழ்க்கையில் எவ்வளவு கஷ்டப்படுகிறேன் என்பதை நீங்கள் பார்த்தீர்களா?” என பணிவோடு கேட்டேன். அதற்கு அவர், சோகமான புன்னகையோடு என்னிடத்தில் கூறியது என்ன தெரியுமா?:

> *“அன்பான என் பிள்ளையே, நான் உனக்கு எந்த சுமையும் தரவில்லை! இதைச் சுமக்க அவசியமும் இல்லை! இவையாவும் பிசாசு கொடுத்திடும் சுமைகள்! இந்த சுமைகளே, உன் ஜீவிய சமாதானத்தை அரித்துக்கொண்டிருக்கிறது! அந்த ‘சுமையை’ ஏன் சுமந்து கொண்டிருக்கிறாய்? அதை நீயே விட்டுவிடு! உன் ஒரு விரலால் கூட அதை மீண்டும் தொடுவதற்கு மறுத்துவிடு! அப்போது, உன் ஜீவிய பாதை மிக எளிதாய் இருப்பதையும், ‘நீயோ’ கழுகின் பெரிய செட்டையில் அமர்ந்து பாதுகாக்கப்பட்டதைப் போலவும் உணருவாய்!” என கூறினார்.*

இவ்வாறு எனக்கு கூறி ஒரு விரலால் என் கரத்தைத் தொட்டார். இதோ, சமாதானமும் மகிழ்ச்சியும் என் உள்ளந்திரியங்களை ஆட்கொண்டது. என் கைகளில் பிடித்து வைத்திருந்த சுமையை உடனே தூக்கி எறிந்தேன்! மகிழ்ச்சி பொங்க என் நன்றியை காட்டுவதற்கு அவருடைய பாதத்தில் விழுவதற்கென ஓடியபோது, கண் விழித்து விட்டேன்! இப்போது என் எல்லா கவலைகளும் பாரங்களும் என்னை விட்டு நீங்கிபோனது!” என, என் அம்மா கூறினார்கள். அந்த நாள் முதல், அவர்களின் மரண நாள்வரை என் வீட்டில் உள்ள யாரைக்காட்டிலும் அவர்களே அதிக மகிழ்ச்சியுடையவர்களாய் இருந்தார்கள்! இந்த பாக்கியமான நிகழ்ச்சியே, நம் எல்லோருடைய வாழ்க்கையிலும் இந்த வருடத்தின் கடைசியில் தங்கி இருப்பதாக, ஆமென்.

*- Mrs.சார்லஸ் கௌவ்மென்*

## நீங்கள் அன்பில் நடக்கிறீர்களா?

*திவ்ய அன்பில் நடந்திட, திவ்ய வல்லமை தேவை*

*நீங்கள் தெய்வ அன்பினால் நிறைந்து வாழ்கிறீர்களா? அப்படியானால் ஏதாகிலும் ஒன்றை முன்னிட்டு "உங்கள் சகோதரனுக்கு விசனம் உண்டாக்கினால், நீ அன்பாய் நடக்கிறவனல்ல" என வேதம் தெளிவாய் கூறுகிறது. நீங்கள் ஒன்றை பேசியதோ அல்லது செய்ததோ யாரோ ஒருவரிடத்தில் கொண்ட உறவை அல்லது அனேகரிடத்தில் கொண்ட* **அன்பை முறிக்குமென்றால்,** *நீங்கள் அன்பாய் நடக்கிறவன் அல்ல! இதை தொகையிட்டுச் சொல்ல வேண்டுமென்றால்.....*

*1) நீங்கள், எல்லோரிடமும் கொண்ட பொறுமை 'நீடிய' பொறுமையாய் இல்லாமல் தணிந்து போனால், நீங்கள்* **அன்பில் நடக்கிறவரல்ல!**

*2) உங்களிடத்தில் தயவு இல்லை என்றால், தானாகவே பிறருக்கு சேவை செய்யும் விருப்பம் குறைந்துவிடும்! ஆகவே, நீங்கள் அன்பில் நடக்கிறவரல்ல!*

*3) உங்களுக்கு யாரோ செய்த தீமைகளை மீண்டும் நினைவு கூர்ந்தால், நீங்கள் அன்பில் நடக்கிறவரல்ல!*

*4) சகலத்திலும் நம்பிக்கையோடும் சகலத்திலும் விசுவாசத்தோடும் நீங்கள் இல்லையென்றால் நீங்கள் அன்பில் நடக்கிறவரல்ல! ஏனென்றால், யாரோ சிலருக்கு ஏற்பட்ட சுகவீனமோ அல்லது நஷ்டமோ* **மீண்டும் நல்லதாய் மாறும் என்ற நம்பிக்கை,** *அன்பில் நடக்கிறவர்களுக்கே உண்டு!*

*5) ஒருவர் எதைப் பேசினாலும் அல்லது செய்தாலும், அதை நீங்கள் தாங்கிக்கொள்ள முடியவில்லையென்றால், நீங்கள் அன்பில் நடப்பதை விட்டுவிட்டீர்கள் என்பது தெளிவாகிறது. ஏனென்றால்* **அன்பு எல்லாவற்றையும், எல்லோரையும் தாங்கி சகித்துக்கொள்ளும்!**

*6) நீங்கள் தீமைக்கு நன்மை செய்து, அதை ஈடுசெய்யாதிருந்தால், நீங்கள் 'தொடர்ச்சியாய்' அன்பில் நடக்கவில்லை! ஏனென்றால் 'நன்மை' எப்போதும் அன்பில் நிலைத்திருக்கும்!*

*7) உங்களுக்கு செய்யப்பட்ட எந்த தீமையையும் நீங்கள் மன்னிக்கவில்லையென்றால், அன்பில் நடப்பதிலிருந்து தூரம் சென்றுவிட்டீர்கள்! ஏனெனில் அன்பானது, தனக்கென்று ஒரு எல்லையை வைத்திராமல் தனக்கு ஏற்பட்ட எவ்வித தீங்கையும், தானாக முன்வந்து மன்னித்திடும்! உங்களுக்குத் தீங்கு செய்தவர்கள்*

'உங்களிடம் மன்னிப்பு கேட்காவிட்டாலும்' அவர்களை 'அன்பு' மன்னித்துவிடும்!

**உயிரோட்டமான திவ்ய அன்பை தங்கள் இருதயத்தில் பெற்ற ஒவ்வொருவரிடமும் 'ஒப்புரவாகும் ஆவி' எப்போதும் கிரியை நடப்பிக்கும்!**

மேலும், தெய்வ அன்பு கொண்டவர்கள் மாத்திரமே எப்போதும் **ஊழிய மனப்பான்மை** கொண்டிருப்பார்கள்! ஆம், எப்போதும் கொடுக்கும் உள்ளம் கொண்டிருப்பார்கள்! தாங்கள் பெற்ற ஆவிக்குரிய செல்வத்தையும், உலக தேவைகளையும் பகிர்ந்து கொடுப்பார்கள்! கொடுக்கும் சுபாவம் இல்லாமல், நீங்கள் எவ்வளவு நன்றாய் பிரசங்கித்தும், நீங்கள் எவ்வளவு நன்றாய் சபையில் பாடியும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. "பிறரை இரட்சிப்புக்குள் நடத்துவதற்கோ, பிறருக்கு பக்திவிருத்தி உண்டாக்குவதற்கோ" உங்களிடம் ஆர்வம் இல்லையென்றால், கிறிஸ்துவின் அன்பில் நடக்க வேண்டும் என்ற ஞானத்தை இழந்துவிட்டீர்கள். அப்படியிருந்தால் நீங்கள் எல்லாக் கூட்டங்களுக்கும் தவறாது வருவதாலோ, சபையில் கேட்ட செய்திகளுக்கு நன்றியுள்ளவர்களாய் இருப்பதாலோ, பிரயோஜனம் ஏதுமில்லை! பிறரை குறைகூறி நியாயந்தீர்ப்பவர்கள் பொல்லாத குணம் கொண்டவர்கள். ஆகவே, அவர்கள் இருதயத்தில் தெய்வ அன்பு ஒருபோதும் குடிகொண்டிருப்பதில்லை.

**சிலர் செய்த திரளான பாவங்களையும் அன்பு மறைத்து மூடி விடும். அவ்வாறு மறைப்பதற்கு பதிலாய், வெளியில் பேசித் திரிவீர்களென்றால் தெய்வ அன்பு உங்களிடத்தில் இல்லை என்பது மாத்திரமல்லாமல்.... மனுஷனுக்குரிய அன்புகூட உங்களிடத்தில் இல்லை என்றே கூற வேண்டும்!**

நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்தால், அவருடைய எல்லா கற்பனைகளுக்கும் கீழ்ப்படிந்திருப்போம். அதில் முக்கியமானது என்னவென்றால், திவ்ய அன்பின் சுபாவத்திற்கு விரோதமாக யாதொன்றும் நாம் செய்திட மாட்டோம். ஆகவே இந்த மகிமையான அன்பினால் நாம் எப்போதும் நிறைந்திருப்பதற்கு 'அபூர்வமான **பரிசுத்தாவியின் வல்லமையை** பெற்றிருந்தால் மாத்திரமே' உங்கள் சிந்தைக்கும் புலப்படாத வலிமையான அன்பின் காரியங்களை நீங்கள் செய்திட முடியும்! உண்மைதான், பரிசுத்தாவியின் வல்லமையால் நீங்கள் நிரப்பப்படும் செயல் எவ்வளவு ஞானமுள்ளதாய் இருக்கிறது! ஆமென்.

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

## மெய்விசுவாசம், அன்றாட ஜீவியத்தில் மாறுதல் உண்டாக்கும்!

*தன்னை சிலுவையில் இழந்தவனே மாறுதல் பெற்றவன்*

ஒரு ஆங்கிலேய, பணம் படைத்த விஞ்ஞானி 'புராட்டஸ்டண்ட் சபையில்' மிக மதிக்கத்தகுந்த நபராய் கருதப்பட்டவர்! அவர், கலாத்தியர் 2:20-ம் வசனத்தில் கூறப்பட்ட "கிறிஸ்துவுடனேகூட சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்! இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்ற வசனத்தை குறிப்பிட்டு "நான் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறேன்! இந்த வசனத்தின்படி நான் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை! கிறிஸ்துவே எனக்குள் எல்லாமுமாய் மாறிவிட்டார். அவர் சிலுவையில் அறையப்பட்டதோடு என் வேலை முடிந்தது! இந்த வசனத்தின்படி கிறிஸ்தவ வாழ்க்கையை மிக எளிதாய் பார்க்கிறேன்!" என, தனக்கு வாய்ப்பளித்த பிரசங்க மேடையில் கொண்டாடிப் பேசினார், இந்த பணம் படைத்த விஞ்ஞானி! புராட்டஸ்டண்ட் தேசத்திலிருக்கும் அந்த சபையில், அவர் பேசியதைக் கேட்ட ஓர் ஆவிக்குரிய மனிதன் என்ன பதில் சொல்லுவார்?

**"இந்த வசனம் என் கிறிஸ்தவ வாழ்க்கையை இலகுவாய் மாற்றிவிட்டது!" என அவர் கூறியது உலக வாழ்க்கையை ஆதாரமாய் கொண்டதே அல்லாமல், ஆவிக்குரிய ஜீவியத்தின் நிறைவு அல்ல!**

எனவே, அவர் கூறிய அனைத்தும், **மாம்ஷீக கிறிஸ்தவத்தின் வஞ்சனை!** என்றே ஆவிக்குரிய வளர்ச்சி கொண்டவன் கூறுவான்! ஆம், ஒரு முதிர்ந்த ஆவிக்குரிய மனிதன் கூறிய இந்த கூற்றே வேத பூர்வமான சத்தியம்!

இந்த பணக்கார கிறிஸ்தவ விஞ்ஞானி புதிய ஏற்பாட்டை முழுமையாய் படித்திருக்க மாட்டார்! தன்னை ஜீவ பலியாய் ஒப்புக்கொடுத்த ஸ்தேவானின் ஜீவியம் இவருக்குத் தெரியுமா? அல்லது ஏராளமான பாடுகளின் வழியாய் 'மகிமையின் சுவிசேஷத்தை' வெளிப்படுத்திய பவுலின் வாழ்க்கைதான் இவருக்குத் தெரியுமா? அல்லது கிறிஸ்துவைப்போல் பாடுபட்டு மரித்து "கிறிஸ்துவுக்கு மகிமை சேர்த்த" பேதுருவின் வாழ்க்கையையும் அவரது நிருபத்தையும் இவர் கவனித்துப் படித்தது உண்டா?

கிறிஸ்துவை நேசத்துடன் பின்பற்றிய பல்லாயிரக்கணக்கான உத்தம தாசர்கள், தங்கள் விசுவாசத்திற்காக உடனடியாகவோ அல்லது கொடிய சிறைவாசத்திலோ, தங்களை மகிழ்வுடன் ஒப்புக்கொடுத்து விசுவாச மரணம் அடைந்தார்கள் என்பதுகூட சில கிறிஸ்தவர்கள்

*அறியாததுபோல் இருப்பது தவறல்லவா?*

**பரிசுத்தவான்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் கிறிஸ்துவின் வசனம் ஊடுருவிச் சென்று, ஜெயம்பெற்றதை காணத்தவறுவது ஏன்?**

*எப்படியிருந்தாலும், அந்த புராட்டஸ்டண்ட் ஐசுவரியவானின் 'ஜீவனற்ற' பிரசங்கத்தையும், அவரையும், அவருடைய மனசாட்சிக்கும், நம் கர்த்தராகிய நீதிபதிக்கு ஒப்புக்கொடுப்பதே நல்லது! ஏனெனில், இருதயங்களை சர்வலோக நியாயாதிபதி மாத்திரமே அறிந்திருக்கிறார்! அந்த பணம் படைத்த கிறிஸ்தவ விஞ்ஞானி, தன் 'விசுவாச சேதத்தை' பகிரங்கமாய் வெளிப்படுத்திவிட்டார்! ஆனால், எத்தனை எத்தனை கிறிஸ்தவர்கள் 'தங்கள் விசுவாச சேதத்தை' இருதயத்தில் மறைத்து வைத்திருக்கிறார்களோ? தெரியவில்லை! உங்களின் வெளிப்புறமான ஜீவியத்தை 'கிறிஸ்தவம்' ஊடுருவிச்சென்று உங்களின் ஆவிக்குரிய போலித்தன்மையை காட்டவில்லையா? அல்லது உங்கள் பதிலை 'மழுப்பலாக' பேசி, போலியான நிம்மதி அடைந்தீர்களா?*

ஒரு மெய்கிறிஸ்தவனை சித்தரித்து காட்ட வேண்டுமென்றால்: "அவன், தான் சுமந்து வந்த சிலுவையை" ஒருபோதும் இழக்காதவனாய் இருப்பான்! இதை, ஆண்டவர் மிகத் தெளிவாய் "ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால்" அவன் தன்னைத்தானே வெறுத்திருக்க வேண்டும்! பின்பு, தன் சிலுவையை அனுதினமும் எடுத்திருக்க வேண்டும்! இவ்வாறாகவே, அவன் என்னை, பின்பற்றக்கடவன்! என, எத்தனை ஆணித்தரமாய் எடுத்துரைத்தும், பல்லாயிரமான கிறிஸ்தவர்கள், இப்படி ஒரு வசனம் வேதத்தில் இருப்பதாகக்கூட அறியாமலிருப்பது, வேதனை!

**சிலுவையை கெம்பீரமாய் ஏந்திவாழும் ஒரு கிறிஸ்தவன்** "தன் எதிர்கால வாழ்க்கையைக் குறித்து யாதொரு வரையறையும் கொண்டிருக்க மாட்டான்". மெய்யாகவே, அவன் என்று சிலுவையை ஏந்திச் சென்றானோ, அன்றே அவன் தன் ஜீவியத்தின் மீது கொண்டிருந்த சொந்த ஆளுகையை முற்றிலும் இழந்திருப்பான்! 'அந்த சிலுவை' இப்போது அவனுக்கு சொந்தமாகி விட்டபடியால், சுயத்திற்கென்று அவனை சந்திக்கும் எல்லாவித விருப்பங்களையும் 'அந்த சிலுவை' காந்தத்தைப்போல் ஈர்த்து அவைகளை புறக்கணித்திருக்கும்! இவ்வாறு கிரியை செய்திடும் சிலுவையைக் கொண்டு, ஒரே ஒரு செயலையே செய்திடுவான். அது என்னவெனில், அவனை ஆட்கொண்ட சிலுவை "சிலுவையில் அறையப்படுவதற்கே" அவனை எப்போதும் நடத்தும்! ஆமென்.

*- A.W.டோசர்*

## கர்த்தரோடு தனித்திருந்து, வளர்ச்சி கண்டேன்!

*அவருக்குள் பிழைத்திருக்கும் பரவசம்*

ஒரு தொடர்ச்சியான, மாறுபட்ட சூழ்நிலையில் திரும்பத் திரும்ப ஏற்பட்ட உரையாடல் என் மனதிற்கு சற்று பாரமாய் இருந்தபடியால் 'நான் ஓய்ந்திருக்கும்படியாக அனுமதி கேட்டு' தந்தை *லா-கோம்பேயிடம்* கடிதம் எழுதினேன். அதன் விளைவாய், ஒவ்வொரு நாளும் நான் கர்த்தருடைய அன்பினால் ஆட்கொள்ளப்பட்டு பெரு மகிழ்ச்சி கொண்டேன். மேலும், நான் ஒரு 'ஆவிக்குரிய தாயாய்' வளர்ந்த நிலையையும் ஆண்டவர் உணர்த்தினார்! 'ஆத்துமாவின் பூரணத்தை' என்னால் வார்த்தைகளில் விவரிக்க முடியவில்லை. கர்த்தரோடு இசைந்திருந்த இந்த சமயத்தில், தந்தை *லா-கோம்பேயிடமி*ருந்து எனக்கு காணப்பட்ட இடைவெளியை என் இருதயம் சரியாக்கியதைப்போல் தோன்றியது!

**கர்த்தர் எனக்கு காண்பித்தது என்னவென்றால் "தந்தை *லா-கோம்பே* என்னுடைய தாசன்! ஆயிரத்தில் ஒருவனாக நான் அவரை தெரிந்துகொண்டேன்! பல சமயங்களில் அவர் தனித்திருந்து என்னை கனப்படுத்தினார்!" என ஆண்டவர் எனக்கு கூறியிருந்தார்!**

ஆகிலும் கர்த்தர் தனக்குரியவர்களை பூரண மரணத்திற்குள் நடத்தி, பழைய மனிதன் முற்றிலும் அழிக்கப்படுவதையே விரும்புவார். தந்தை லா-கோம்பே அவர்கள்தான் முதலாவதாக 'இயேசு நடந்த மரண பாதையில் நான் நடந்திட' காண்பித்தவர்! இப்போது அந்த பூரண பாதையில் கடந்து வரும் நான், அந்த பாதையின் ஆழத்தை அவருக்கு நான் காண்பித்திட கடமைப்பட்டவளாகிவிட்டேன்!

**இவ்வாறாக, மற்றவர்களையும், நான் கடந்து சென்ற பாதைக்குள் நடத்த, நான் தகுதியுள்ளவளாய் முன் செல்வதற்கு பொறுப்புள்ளவளாய் இருக்கும்படி கர்த்தர் என்னை நடத்தினார்.**

நாம் மறுரூபமடைந்து, கர்த்தரோடு ஒன்றித்து இருக்க வேண்டும் என்பதே பிரதானம்! என்னுடைய ஆத்துமா முன்னேறிச் செல்வதை நான் அறிந்தபோதும், தந்தை *லா-கோம்பே* அவர்கள் நான் இருக்கும் ஆவிக்குரிய நிலையைக் காட்டிலும் மேலான நிலைக்கு வருவாரென்பதை நிச்சயித்திருந்தேன்! தன் பிள்ளைகள், தன் தாயின் குணாதிசயத்தை விட அதிக மேன்மையடைந்திருப்பதைக் கண்டால் ஒரு தாயின் உள்ளத்தைப்போல் "நான் மனம் பூரிப்படைவேன்" என்பதை தேவன் அறிவார்!

நான் கர்த்தரோடு தனிமைப்படுத்திக்கொண்ட காலங்களில், நான்

*ஆண்டவரிடம் கற்றுத் தேர்ச்சி பெற்ற ஆவிக்குரிய விஷயங்களை அவருக்கு எழுதும்படி வலிமையான நாட்டம் கொண்டிருந்தேன். ஆகிலும், 'என் சொந்த விருப்பத்தை' நான் மறுத்து, எதிர்த்து நின்று, சுகவீனமும் அடைந்தேன். பின்பு நான் எழுத யோசித்தபோது, எதை எழுதுவதென்றே தெரியாமலிருந்தேன். ஆரம்பித்து எழுத ஒரு யோசனையும் ஒரு வார்த்தையும் எனக்கு உண்டாகவில்லை.*

**இந்த நிலைக்குப் பின்பே, பரத்தின் ஓர் திவ்யமான தூண்டுதலால், கிறிஸ்துவின் கிருபையின் நிறைவான ஆசீர்வாதத்தைக் கொண்டு எழுதத் தொடங்கினேன். இந்த மனநிலையை அடைந்த பிறகுதான், தந்தை லா-கோம்பே அவர்களுக்கு கடிதம் எழுதினேன்!**

*அதற்கு பதில் எழுதிய தந்தை லா-கோம்பே அவர்கள், "உங்களிடமிருந்து யாதொரு தொடர்பும் இல்லாதபடியால், கடிதம் எழுதும்படி கூறுவதற்கு ஆயத்த நிலையில் இருந்தேன். ஆனால் நீங்கள் சுகவீனமாய் இருந்தபடியால் அப்படி நான் எழுதவில்லை" எனக்கூறினார். நான் அவருக்குப் பதில் எழுதும்போது "அந்த பலவீனம், என்னுடைய சுய - விருப்பத்தின் மீது கொண்ட எதிர்ப்பு நிலையில் ஏற்பட்டதே ஆகும்" எனக்கூறினேன். இப்போதுதான் "நான் மறுபடியும் எழுத ஆரம்பித்திருக்கிறேன்". இருப்பினும், "எதை எழுத வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை! அதை அறிந்து கொள்ள வேண்டிய விருப்பமும் என்னிடத்தில் இல்லை! எழுத வேண்டுந்தான்.... ஆனால் அந்த பகுதிக்குள் தேவன் என்னை நடத்தும்படி என்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்துவிட்டேன்" எனக்கூறினேன்.*

*என்னுடைய பதிலைக் கேட்ட தந்தை லா-கோம்பே அவர்கள்* "**கர்த்தர் உங்களுக்கு கட்டளையிட்டபடியே செய்யுங்கள்!**" *என பதிலுரைத்தார். கர்த்தர் என்னை நடத்தியபடியே பேனாவும் பேப்பரோடும் உட்கார்ந்தேன். நான் முதல் எழுத்தாய் என்ன எழுதவேண்டும் என்றுகூட அறியவில்லை!*

*ஆகிலும், நான் எழுத ஆரம்பித்தவுடன், சரியான விஷயங்கள் ஏராளமான வல்லமையோடு என் பேனாவின் மூலமாய் ஆற்று வெள்ளம்போல் எழுதத் தொடங்கியது. நான் எழுதிக்கொண்டிருந்த போதே, என் பாரமெல்லாம் இறக்கி வைத்ததைப்போலவும், எனக்குள் புது மலர்ச்சி தோன்றியதைப்போலவும் உணர்ந்தேன். நான் எழுதிய விஷயத்திற்குரிய தலைப்பு என்னவென்றால் "விசுவாசத்தில் மறைந்திருக்கும் அந்தரங்கப் பாதை" என்பதுதான். கடும் புயலை முன்வைத்து! பேரிரைச்சலான நீரோடையை முன்வைத்து!*

*ஆழமான ஆறுகளை முன்வைத்து! 'அந்தரங்க விசுவாச பாதையை' ஒப்பிட்டு எழுதிமுடித்தேன்.*

*நான் எழுதிய விஷயங்கள், தந்தை லா-கோம்பே அவர்கள், முன்பு எனக்கு சுட்டிக்காட்டி வாழ்ந்த விசுவாசப் பாதைக்கு முற்றிலும் மேம்பட்டதாய் "உதாசீனத்திற்கும் அவமானத்திற்கும் ஊடாய் சென்ற பாதையாய்" இருந்தது. இந்த மேம்பட்ட பாதைக்குள் பிரவேசிப்பதற்கே தந்தை லா-கோம்பே அவர்கள் தன்னை தாழ்த்தி முன்னேறிச் செல்ல தடுமாறினார். ஒரு தாயின் வயிற்றில் உருவாவதற்கு முன்பே 'தேவ சித்தத்தின்படி சிருஷ்டிக்கப்பட்ட' தேவதாசனுக்கு, நான் முன் வைத்த ஆலோசனைகள், என் உள்ளத்திற்கு வலியைத்தந்தது!*

*ஆகிலும், இக்காலத்தில், கர்த்தர் என் ஆத்துமாவை மிகவலிமையாக ஆட்கொண்டார்! அந்த அனுபவத்தில், ஒரு வார்த்தைகூட பேசாமல் சில நாட்கள் இருந்தேன். என்னை முழுமையாய் ஆட்கொண்டு, என் உள்ளான ஜீவியத்தை முற்றிலும் மறுரூபமடையச் செய்ததில் கர்த்தர் மகிழ்ச்சி அடைந்தார் என்பதைக் கண்டேன்! மேலும், என் இருதயத்தை ஆளும் வலிமையான எஜமானாய் கர்த்தர் மாறி, நான் 'அவரைவிட்டு சிறிதேனும் விலகாதபடி' ஆண்டு கொண்டார். இதுபோன்ற வளர்ச்சியான சூழ்நிலையில், என் சகோதரியிடமோ அல்லது என் வீட்டிலுள்ள யாவரிடமோ சாதாரணமாய் பழகுவதற்கு எனக்குத் தடை ஏற்படவில்லை. உபயோகமற்ற காரியங்களில் அவர்கள் ஈடுபடுவதைக் கண்டு, எனக்குள் ஏதும் சலனம் ஏற்படவுமில்லை. "நான் கர்த்தரோடு தனித்திருக்க இடங்கொடுங்கள்" என்ற எனது வேண்டுதல், நான் அவரைப் பற்றிக்கொள்ளவும்! அவர் என் கரத்தைப் பிடித்து தன்னோடு நெருக்கமாய் சேர்த்துக்கொள்ளவும்! விவரிக்க முடியாத அனுபவமாய் மாறியது! அல்லேலூயா.*

*- மேடம் குயான்*

---

## 'நிலைத்திருக்கும் ஜீவியமே' கிறிஸ்தவத்தின் ஆதாரம்!

*பெலவீனம் உணர்ந்த கொடியே, செடியில் நிலைத்திருக்கும்*

*எல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய் பிரயாசப்பட்ட அப்போஸ்தலன் தம்மைக் குறித்துச் சொல்லக்கூடியது இவ்வளவுதான்: "தான் ஒன்றுமில்லாத கொடியென்றும், கிறிஸ்துவாகிய செடியில் அவர் நிலைத்திருந்தால் மாத்திரமே, உன்னதமான ஜீவியமும், கனிகள் நிறைந்த உத்தம ஊழியமும் தன்னில் காணப்பட முடியும்" என, அனுபவ சாட்சியாகக் கூறினார்.*

**தான் ஒன்றுமில்லை, தன்னால் ஒன்றும் ஆகிறதில்லை..... தான் வளர்ந்து கனிகொடுப்பதற்கு ஒரே காரணம், தான் இடைவிடாமல் சார்ந்து கொண்டு, நிலைத்திருக்கும் செடியினால் என்பது அந்த கொடிக்குத் தெரியும். நாம் ஒன்றுமில்லாதவர்களாகும் போது, கிறிஸ்து நமக்கு எல்லாமுமாகிறார்! கொடியின் பாக்கியமான ஜீவியம் அதுவே!**

*அது பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளதாயிருப்பதின் ஒரே இரகசியமும் அதுதான்! ஆண்டவர் நம்மை இந்த ஆசீர்வாதமான ஜீவியத்திற்கே அழைக்கிறார். அவரே நம்மை தமது செடியின் ஜீவனால் நிரப்புவதினால், நாம் கனிகொடுக்கவேண்டுமென்று இயேசு விரும்பி எதிர்பார்ப்பது, ஏற்புடையதுதானே! நமது இருதயம், அவருடைய இருதயத்தோடு இணைக்கப்படுவதால் "***அவரது, அதே ஜீவியமே***" நம்மில் காணப்படும்! அவர் எப்படி ஊழியம் செய்தாரோ, அதே தரத்தில் நாமும் ஊழியம் செய்திட முடியும்!*

*ஆகவே, கிறிஸ்துவில் நிலைத்திராத ஜீவியமும் ஊழியமும் 'செடியிலிருந்து விலகிய கொடிபோல' வீணாகுமென்பது நிச்சயம்! அப்படியானால் நிலைத்திருக்கும்படி நாம் செய்ய வேண்டியதென்ன? இந்த உவமையை வாசிக்கும்போதே 'நாம் செய்ய வேண்டிய' சில குறிப்புகளும் காணப்படுகின்றன: '***என்னில் நிலைத்திருங்கள்***' என்று ஆண்டவர் திரும்பத் திரும்ப கூறினார். நாம் குளிரில்போய் வெகுநேரம் உட்கார்ந்திருந்தால் நமது தேகம் குளிரால் நடுங்கும்! நாம் வெயிலில் வெகுநேரமிருந்தால் நமது தேகம் உஷ்ணமேறி கொதிக்கும்!*

**இதுபோலவே, நாம் கிறிஸ்துவின் சமூகத்தில் அமரிக்கையாய் காத்திருக்கும்போது அவருடைய திவ்விய சமூகம் நம்மை ஆண்டு கொள்ளுகிறது!**

*அவருடைய பாதபடியில் எவ்வளவுநேரம் செலவழிக்கிறோமோ அவ்வளவுக்கு அவருடைய சாயலுக்கொப்பாக மாறுகிறோம். "அவரை நோக்கிப் பார்த்து பிரகாசமடைந்தார்கள்". "ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2கொரி.3:18). ஆம், அவரது சமூகத்தில் வெளிச்சம் பெற்று நமது பாவங்கள் நீங்கி கழுவப்படுகிறோம். அவரது சமாதானம் நம்மை நிரப்புகிறது! அவர் சாயல் நமக்கு கிடைக்கிறது! அவரில் நிலைத்திருந்து ஜீவிப்பதற்கு,* **அவர் சமூகத்தில் அமர்ந்து, காத்திருந்து ஜெபிப்பது** *அவசியம் என்பதை உணர்கிறோம்!*

**கர்த்தர் தமது கொடிகளை ஒருக்காலும் இழந்துபோகமாட்டார்.** *இந்த பாக்கியமான கொடியின் ஜீவியத்தில் நாம் பிரவேசித்து, மிகுந்த*

கனிகளைக் கொடுப்பதால் நம்மைச் சுற்றியுள்ள குடும்பம், சபை, உலகத்தாரும், ஆசீர்வதிக்கப்படுவர்! பிதா மகிமைப்படுவார்! இவ்வாறு, இரட்சகர் நம்மை கொடிகளாகத் தெரிந்து கொண்ட நோக்கமும் நிறைவேறும்! அல்லேலூயா.

- பரமானந்தம் ஐயர்

## ‘சபையின் சுவிசேஷக்கூட்டத்தில்’ உங்கள் பங்கு என்ன?

*‘ஆத்தும ஆதாயம்’ ஒவ்வொரு விசுவாசியின் பொறுப்பு*

ஒரு சபையில் சுவிசேஷக் கூட்டம் வாரந்தோறும் நடைபெறுவது நல்லது. ஆண்டவர் இயேசு ‘ஆத்தும ஆதாயப் பணியை’ கட்டளையாகவே நமக்குத் தந்திருக்கிறார். நீங்கள் செல்லும் இடமெல்லாம், உங்கள் ஜீவகாலம் முடியும் வரை எஜமானின் **ஆத்தும ஆதாய சுவிசேஷ கட்டளையை** கவனமாய் பற்றிக்கொண்டு வாழுங்கள். ஆத்தும ஆதாயப் பணி இல்லாத ஒரு சபையிலுள்ள மக்கள் ‘உபதேசத்தில் தேங்கி நிற்கும்’ ஒரு சிறிய குழுவாய் மாறிவிடுவார்கள்!

ஆகவேதான், வாரந்தோறும் நடைபெறும் உங்கள் சபையின் சுவிசேஷக் கூட்டம், முக்கியமான நாளாய் சபையிலுள்ள எல்லோருக்கும் மாற வேண்டும்! இரட்சிக்கப்படாத நண்பர்களை, சபையின் சுவிசேஷக் கூட்டத்திற்கு அழைத்து வாருங்கள்.

**தாங்கள் இரட்சிக்கப்பட்டபடியால், சுவிசேஷக் கூட்டம் தங்களுக்குரியது அல்ல என சபையிலுள்ள ஒருவராகிலும் எண்ணிவிடக்கூடாது. சபையின் சுவிசேஷக் கூட்டங்களில் தீவிரப் பணியாற்றுவது ஒவ்வொரு விசுவாசியின் கடமை!**

ஒரு விசுவாசி இரண்டு நண்பர்களையோ, நான்கு நண்பர்களையோ குறைந்தது ஒரு நண்பரையோ அழைத்து வர வேண்டியது அவர்களின் பொறுப்பாய் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அழைத்து வந்த நண்பர்களை, ஏதோ ஒரு மூலையில் உட்கார வைத்துவிடாமல், அவர்களோடு சேர்ந்து நீங்களும் உட்கார வேண்டும். நீங்கள் மௌனமாயிராமல் ‘சுவிசேஷத்தின் மதுரத்தை’ உங்கள் ஜீவியத்தோடு கலந்து, அதை முன்னுரையாய் அவர்களிடம் கலகலப்பாய் பேசுங்கள். சுவிசேஷ செய்தியைத் தரும் தேவ மனிதரின் பக்தியையும் அறிமுகப்படுத்தி பேசிக்கொள்ளுங்கள். சுவிசேஷக்கூட்டம் நடைபெறும்போது செய்தியை இலகுவான விளக்கத்தோடு உங்கள் நண்பரிடம் குனிந்து மெதுவாய் பேசுங்கள்.

**நண்பர்களை சபையின் சுவிசேஷக்கூட்டத்திற்கு அழைத்துவரும் நீங்கள்,**

**சரியாக ஆரம்ப நேரத்தில் வராமல் 'முன்கூட்டியே' வாருங்கள். எவ்வளவு முன்வரிசையில் அமர வேண்டுமோ, அவ்வளவாய் உங்கள் நண்பரோடு சேர்ந்து அமருங்கள்!**

*சபையின் சுவிசேஷக்கூட்டத்தின் நாள் நெருங்குகையில் லூக்கா 14:21-23 வசனங்களில் கூறப்பட்டது போல் "பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய் போய் 'சுவிசேஷம் அறியா' ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே (சுவிசேஷக் கூட்டத்திற்கு) கூட்டிக் கொண்டு வரவேண்டும்.... ஜனங்கள் உள்ளே வர வருந்தி கூட்டிக்கொண்டு வரவேண்டும்". சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் பொறுப்பு உங்களுடையதல்ல..... ஆனால்* **ஆத்துமாக்களை அழைத்து வரும் பொறுப்பு உங்களுடையது!** *சபையின் சுவிசேஷக்கூட்டத்தில் விசுவாசிகள் மாத்திரமே அமர்ந்திருந்தால், அதை எப்படி சுவிசேஷக்கூட்டம் என அழைக்க முடியும்? ஆகவே, வாரந்தோறும் நடைபெறும் சபையின் சுவிசேஷக் கூட்டத்திற்கு, சபையிலுள்ள விசுவாசிகள் 'ஜனங்களை கூட்டிச்சேர்ப்பது' அவர்களின் அவசியமான கடமையாக இருக்கிறது. நீங்கள் அழைத்து வரும் நபருக்கு, குறைந்தது ஒரு புதிய ஏற்பாடு புத்தகத்தையாவது நீங்கள் வாங்கிக் கொடுத்திருப்பது நலம். போதகர் குறிப்பிடும் வசனங்களை 'வேகமாக புரட்டி' அந்த வசனங்களை அவருக்கு சுட்டிக் காட்டுங்கள். போதகர் பேசிய சற்று கடினமான வாக்கியங்களை 'எளிமையாக்கி' நீங்கள் அழைத்து வந்த நண்பருக்கு சொல்லுங்கள்!*

*யார் பிரசங்கிக்கிறார்கள் என்பது முக்கியமல்ல, அந்த சுவிசேஷக் கூட்டத்தில்* "**நீங்கள் அழைத்து வந்த ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டும்**" *என்பதே முக்கியமாகும்! கறைபடாத இந்த நோக்கமே சுவிசேஷக்கூட்டங்களில் நிறைவேற வேண்டும்! 'ஆத்தும ஆதாய' இந்த ஒப்பற்ற பணியில் 'சில காலம் கழித்து' நீங்களும் வளர்ச்சியடைவது கண்டு, நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்!*

*- வாட்ச்மென் நீ*

---

## கவர்ச்சிக்கும் 'அழகும், செல்வமும்' பாவத்திற்கு உண்டு!

*தந்திர பாவத்தின் முடிவு, அழிவில் வெளிப்படும்*

**பா***வத்தின் கொடிய அகோரத்தை மனுஷன் காணக்கூடாததால், அவன் கண்களுக்கு பாவம் வசீகரமாய் தோன்றுகிற அளவுக்கு, அவன் கண்கள் குருடாயிருக்கிறது! இவ்வாறு, பாவத்தின் வசீகரத்தால் ஈர்க்கப்படுகிறவனின் இருதயமும் மனதும் 'உணர்வடையும் தன்மையிலிருந்து' செத்து விடுகிறது. இதுவே,* **ஆவிக்குரிய தொழு**

**நோய்க்கு** ஆரம்பமாயிருக்கிறது. அவன் கொஞ்சம் கொஞ்சமாய், தன் கண்பட்டையின்மேல் உள்ள உணர்வை இழக்கிறான், பாத நரம்பின் உணர்வை இழக்கிறான், விரல்களின் மேல் கொண்ட உணர்வை இழக்கிறான்.... இது, படிப்படியாய் வளர்ந்து சீழ்பிடித்த புண்கள் சரீரத்தில் தோன்றத் துவங்குகின்றன!

**உணர்வுகளெல்லாம் பாதிக்கப்பட்டு, சீரழிந்த இந்த நேரத்தில்தான் 'பாவத்தின் அகோர நிலையை' அவன் கண்கள் காண்கிறது. அவன் ஆத்துமாவில் தோன்றிய குஷ்டம், நரகத்திற்கே இழுத்துச் சென்று தீராத வலியையும், துன்பத்தையும் நிரந்தரம் செய்கிறது!**

கேடான **கற்பு ஒழுக்க நெறி** தவறும் அபாயமான பாவத்தைக் குறித்தும், ஜனங்களுக்கு விழிப்பு இருப்பதில்லை. ஒரு வனத்தின் ஆற்றண்டையில் நான் அமர்ந்திருந்தபோது, 'கொம்புத்தேன்' சேகரிக்கும் ஒருவன், ஆற்றங்கரையிலுள்ள மரத்தில் வேகவேகமாய் ஏறினான். அந்த மரத்தின் கிளையோ ஆற்றின் மையப்பகுதிக்கு மேல் தொங்கியிருந்தது. **'தேனைப் பெற்றுவிடும் ஆசையில்'** மரத்தில் ஏறிய அந்த இளைஞன், ஆற்றில் முதலைகள் சூழ்ந்து அவனைப் பார்த்து கொண்டிருப்பதைக் காணத் தவறி விட்டான். அவனுடைய உடல் பருமனை தேன் கூட்டின் கிளை தாங்காது! என்ற பொது அறிவையும் இழந்தான். சரியாக, தேன் கூட்டின் கொம்பை அவன் அடைந்த மகிழ்ச்சியோடு, அந்த கிளை முறிந்து விழுந்தது. ஆற்றில் விழுந்த அடுத்த கணமே, முதலைகள் அவனைப் பீறி தின்றுவிட்டன! இந்த வெறிச் செயலை நான் கண்டு கதி கலங்கிப்போனேன்!

**இன்றும் உலக மாந்தர்கள், தங்களைவிட்டு கணப்பொழுதில் நீங்கிவிடும் பாவ இன்பத்தைத் தேடி 'தேனை மகிழும்' அந்த நேரத்தில், ஆவிக்குரிய மரணமாகிய முதலையின் வாய்க்குள் சிக்கி சீரழிகிறார்கள்!**

பாவத்தின் ஒரே ஒரு நோக்கம் 'நம் ஜீவியத்தை' ஆவிக்குரிய மரணத்திற்கு கொண்டு வருவதுதான். இதைத் தவிர வேறொரு லாபமான நோக்கம் இருப்பதாக நீங்கள் எண்ணி, ஏமாந்து போகாதீர்கள்.

இந்த உலகத்தின் தீமைகளுக்கு 'தந்திர வார்த்தைகள்' உண்டு! 'மனதை பறிகொடுக்கச் செய்யும்' **அழகு உண்டு!** 'சுகமான வாழ்வு தருவேன்' என கூறும் **செல்வமும் உண்டு!** ஆனால் அதற்குப் பின்னால் **மறைந்திருக்கும் நித்திய நரக அக்கினியோ அல்லது ஜீவனை அழிக்கும் பொல்லாங்கனோ, இவர்கள் கண்களுக்குத் தெரிவதில்லை!** அதனிமித்த மாய் நரகத்தின் பாதாளத்திற்குள் வீழ்ச்சி அடையும் இவர்களை 'அவர்கள் நம்பியிருந்த' யாதொன்றாகிலும் காக்க முடிவதில்லை!

*மற்றொரு முறை, ஒரு அடர்ந்த காட்டிற்குள் நான் சென்றிருந்த போது, **ஒரு பெரிய கழுகு,** காட்டாற்றில் மிதந்து வந்த ஒரு செத்த உடலின் மீது விரல் பதித்து தின்று கொண்டிருந்தது. அந்த வெள்ளம் ஒரு நீர் வீழ்ச்சியின் உச்சத்திற்கு சென்றபோது, தான் அமர்ந்து தின்று வந்த சடலத்தை விட்டு விட்டு பறந்து விடலாம் என அந்த கழுகு முயற்சித்தது. ஆனால் பனியின் குளிரில் ஊறி இருந்த சடலம், கழுகின் நகங்களை இறுகப்பிடித்து கொண்டது! கழுகு எவ்வளவோ செட்டை அடித்து தப்பிவிட முயற்சித்தும் முடியாமல், நீர் வீழ்ச்சியின் பாதாளத்திற்குள் "**செத்த சடலத்தோடு தானும் விழுந்து**" செத்துப் போனது!*

*ஆகிலும் நாம் பெற்ற சுவிசேஷமோ, பாவத்தின் பிடியிலிருக்கும் யாராயிருந்தாலும், தாங்கள் தப்பித்து இரட்சிக்கப்பட விரும்பி தேவனிடம் திரும்பி வந்து விட்டால், இயேசு அவனுக்கு இரட்சகராய் மாறி, பாவத்தின் மரணபிடியிலிருந்து அவனை விடுவித்து, நித்திய ஜீவன் தருவார்! அல்லேலூயா.*

*- சாது சுந்தர்சிங்*

---

## பிறரால் 'புறக்கணிக்கப்படுவது' சீஷர்களுக்குரிய பங்கு!

*'தள்ளப்பட்டவர்களை' அரவணைக்கும் தேற்றரவாளன்*

*'ஒதுக்கி வைக்கப்படுவதால்' வரும் வேதனையை அனுபவித்தவர்களில், நம் குரு இயேசுவுக்கு நிகரானவர் எவருமில்லை! முதலாவது அவரது சொந்த ஊராரால் புறக்கணிக்கப்பட்டார்! அவரது அற்புத செயல்களைக் கண்ட அவர்கள் கேட்ட அலட்சிய கேள்விகளைக் கவனியுங்கள்: "இவர் தச்சன் அல்லவா? மரியாளின் மகன்தானே? யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவரது சகோதரிகள் இங்கு நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா?" (மாற்கு 6:3). இவ்விதம் அவர்கள் இடறலடைந்து அவரை ஏற்றுக்கொள்ளத் தயங்கி* **ஒதுக்கி வைத்தனர்.** *அவர்களது அசட்டையான இக்கேள்விகளுக்கு இயேசு கொடுத்த விளக்கம்: "சொந்தவூரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் மனுஷகுமாரன் மதிப்பு பெறுவர்" என்று கூறினார் (வச.4).* **கட்டுவோர் "புறக்கணித்த கல்லே"** *தேவனது அநாதி தீர்மானத்தின்படி, கட்டிடத்திற்கு "மூலைக்கல்" ஆயிற்று! (லூக்கா 20:17).*

*ஆகிலும், இது உடனே நடந்துவிடவில்லை. இயேசு மூன்று நாட்கள் கல்லறையில் இருக்க வேண்டியதிருந்தது! (அப்.2:23). ஏசாயா 53:3-ல் அவர் எவ்விதம் புறக்கணிக்கப்படுவார் என முன்னுரைக்கப்பட்டுள்ளது:*

“அவர் இகழப்பட்டார்; மனிதரால் புறக்கணிக்கப்பட்டார்; வேதனையுற்ற மனிதராய் இருந்தார்; பாடனுபவித்து நலிந்தார்; அவரைக் கண்டவர்கள் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் அவர் இருந்தார்; அவர் இழிவுப்படுத்தப்பட்டார்; அவரை நாம் மதிக்கவில்லை” என **அவரை ‘ஒதுக்கி வைத்த’** நிலைமையைப் பாருங்கள்! சங்கீதம் 69:7,8-லிலும் குறிப்பிடத்தகு தீர்க்கதரிசனம் அவரைப்பற்றி உண்டு: “ஆண்டவரே, உம் பொருட்டே எனக்கு இழிவு ஏற்பட்டது. **‘வெட்கக்கேடு’ என் முகத்தை மூடிவிட்டது!** என் சகோதரருக்கு வேற்று மனிதன் ஆனேன்! என் சொந்த தாயின் பிள்ளைகளுக்கு அயலான் ஆனேன்”. இது இயேசுவைப் பற்றியது என்பதை அடுத்த வசனம் நமக்கு உறுதிப்படுத்துகிறது (வச.9).

இயேசுவுக்குப் பதிலாக அவரது எதிரிகள் யாரை வேண்டுமென்று கேட்டார்கள்? பரபாஸ்! (லூக்கா 23:18,19). அவன் பேர்போன கொலைகாரன். பரபாஸ் எப்படிப்பட்டவன் என்று அப்போஸ்தலர் பேதுரு தனது சுவிசேஷ உரையில் எடுத்து கூறினார். சாலொமோனின் மண்டபத்தில் குழுமியிருந்தோரிடம் அவர் சொன்னது: “நீங்கள் தூய்மையும் நேர்மையுமானவரை மறுதலித்துக் ‘கொலையாளியை’ விடுதலை செய்யுமாறு வேண்டிக்கொண்டீர்கள். ஜீவனுக்கு ஊற்றாய் இருப்பவரை (ஜீவாதிபதியை) நீங்கள் கொன்று விட்டீர்கள்” (அப்.3:14,15). உண்மைதான் **‘இவனே வேண்டாம்’** என்பதற்காகவே உலகம் நம்மைப் புறக்கணிக்கிறது! நம்மைப் பகைப்பதற்கு “முன்னதாகவே” இயேசுவை உலகம் பகைத்துவிட்டது என்பதை நினைவிற்கொள்வோம் (யோவான் 15:18).

> **“முழுவதும் தள்ளப்படும்வரை” ஒருவனும் முழுமையாய் ஏற்றுக் கொள்ளப்படமாட்டான்** (No man is fully accepted until he is totally rejected!). **இருந்தாலும், ஏன்தான் உலகம் நம்மைப் பகைக்கிறது? அதற்கு “எவ்வித காரண முகாந்திரமும்” கிடையாது (வச.25). இதுவே உத்தம கிறிஸ்தவனின் உயர்ந்த தரமாயுள்ளது!**

இவ்வித முற்றிலும் தள்ளப்பட்ட நிலையில்தான், அடுத்த வசனத்திலே “பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை” இயேசு நமக்கு அறிமுகம் செய்கிறார். அவர் கூறியபோது: “சத்திய ஆவியாகிய **தேற்றரவாளன்** வரும்போது....” என்ற மேன்மையான திவ்விய ஆறுதலின் வார்த்தைகளை தொடங்கி ஆரம்பித்தார்! (வச.26). தள்ளப்படுதலின் வேதனையைத் தூயாவியானவரின் தேற்றரவு (ஆறுதல்) கொண்டே மேற்கொள்ள முடியும்! அல்லேலூயா.

- R.ஸ்டான்லி BYM

## உமது நாமம், எமது ஜெயம்!

*இஸ்ரவேலை காத்திட, வேறொரு நாமம் இல்லை*

*சவுல் அரசன் தொடங்கி, சவுலின் ராணுவத்திலிருந்த தன் மூத்த சகோதரர்கள் உட்பட, எல்லோரும்* **கோலியாத்திற்கு** *பயந்து கலங்கியதைக் கண்ட தாவீது, தெய்வ வைராக்கியத்தோடு அரசன் முன்நின்று "இஸ்ரவேலின் தேவனை நிந்தித்த இவன் நிமித்தம், இஸ்ரவேலில் ஒருவனுடைய இருதயமும் கலங்க வேண்டியதில்லை! நான் போய், இந்த பெலிஸ்தனோடே யுத்தம் செய்வேன்! அரசே, நான் இளைஞன், என்னால் முடியாது என்றா சொல்கிறீர்? கேளும்: ஒருமுறை என் மந்தையை தாக்கிய சிங்கத்தையும், மறுமுறை ஒரு கரடியையும், பின்தொடர்ந்து... அடித்தே கொன்றேன்! அந்த மிருகங்களில் ஒன்றைப்போலவே இவனையும் ஜெயிப்பேன்" என ஏலா பள்ளத்தாக்கு அதிர முழங்கினான். சவுல் அனுமதி கொடுத்து, தன் ராஜ போர் உடுப்புகளை தந்து "போரிடு" என கூறினான்! "அரசே இந்த ஆயுதங்களில் எனக்கு பழக்கமில்லை, இதை நான் அப்பியாசித்ததும் இல்லை!" என உதறிவிட்டு, கோலியாத் முன்பாக கையில் கவணும், அடைப்பையில் 5-கூழாங்கல்லோடும் சென்றான் (1சாமு.17:26-40).*

வெறும் கவணும், கூழாங் கல்லோடும் வந்த இளைஞன் தாவீதை அசட்டை செய்த கோலியாத் "**தன் தேவர்களின் நாமத்தைக் கொண்டு" சபித்தான்.** அவ்வேளையில் 'நேருக்கு நேர்' தைரியமாய் நின்ற வாலிப தாவீதின் விசுவாச முழக்கத்தை கவனியுங்கள்:

*"நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்: நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய, சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தில் உன்னிடம் வருகிறேன்!* ***இஸ்ரவேலை காத்திட 'தேவன் ஒருவரே உண்டு'*** *என, பூலோகத்தார் எல்லோரும் அறிந்து கொள்வார்கள்..... ஏனெனில் 'யுத்தம் கர்த்தருடையது' என்ற முழக்கத்தோடு, பெலிஸ்தனை ஒரே ஒரு கல்வீச்சினால் அவனைக் கொன்றான்!*

**"கர்த்தருடைய நாமத்தை" நம்பி விசுவாசித்து வாழ்ந்த இந்த தாவீதின் ஜெயமே, நமது ஜெயமாகட்டும்! இந்த தாவீதின் சந்ததியிலிருந்து வந்த நம் இரட்சகரின் முழக்கமும், நமது முழக்கமும், "உம் நாமத்தில் கொண்ட விசுவாசமே, எமது ஜெயம்" என நாள்தோறும் அப்பியாசித்து, பழகி..... அப்பியாசித்துப் பழகி, தொடர்ந்து வாழ்வோமாக! ஆமென்.**

*- T.ரத்தினகுமார்*

## இளமையில் 'பாடி, எழுதி'
## கர்த்தரை உயர்த்திய
# 'பிரான்ஸஸ் ரிட்லி ஹேவர்கல்'



ஹேவர்கல் குடும்பம் மிக சாதாரண, ஆனால் மகிழ்ச்சி நிறைந்த உத்தம கிறிஸ்தவ சாட்சியில் பிரகாசித்த குடும்பம்! இரண்டு சகோதரர்கள் மூன்று சகோதரிகளின் நடுவில் பிரான்ஸஸ் ரிட்லி ஹேவர்கல் விசேஷித்த மகளாய் இருந்தாள். நான்கு வயதில் வேதம் கற்று அதை எழுதவும் தொடங்கினார்! அவளுடைய அம்மா 'ஜானி' பிரான்ஸஸ் 11-வயதாய் இருக்கும்போது மரித்துவிட்டார்கள். மரித்த அந்த தருணத்தில் பிரான்ஸஸை அருகில் அழைத்து "அருமை மகள் பிரான்ஸஸ், ஒரு சிறிய ஜெபத்தை தேவனிடம் உறுதியாய் கேள்: **ஓ தேவனே நீர் எனக்காய் ஆயத்தம் பண்ணியவைகளை நான் தவறாமல் நிறைவேற்ற என்னை ஆயத்தப்படுத்தும்**" எனக்கூறி மரித்தார்கள். அந்த ஜெப வாக்கியம் பிரான்ஸஸ் வாழ்க்கையின் முழு ஆதாரமாய் மாறியது. தன் அம்மாவின் "மெய்யான விசுவாசம்" தனக்கும் வேண்டுமென பிரான்ஸஸ் கண்ணீருடன் ஜெபிப்பதுண்டு. தன்னை சந்தித்த அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியுள்ள கிறிஸ்தவளாய் நின்று "இரட்சகரின் அன்பை" வெகு வாஞ்சையோடும், இயற்கையான நட்போடும் அவள் கூறுவாள். தான் நேசித்து வாசித்த வேதம், அன்றாட தன் நடைமுறை வாழ்க்கையில் "கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாய் தன்னை மாற்றும்படி" தொடர்ந்து ஜெபித்து வந்தாள். சிறு பிள்ளைகளுக்கென தியான புத்தகங்கள் எழுதினாள்! வாலிப, வயோதிப மக்களுக்கும் தியான புத்தகங்கள் எழுதினாள். மேலும், ஆவிக்குரிய மிக அத்தியாவசியமான கட்டுப்பாடு ஒழுக்கங்களையும் ஓர் போதனையாக எழுதி வைத்தார். அந்த கட்டுப்பாடான ஒழுக்கத்தில் **"ஞாயிறு ஆராதனை" சபைக்கு தீவிரமாய் செல்வதை வலியுறுத்தினார். அந்த வாசகங்களில் சில என்னவென்றால்:**

1) இந்த நாளை 'கர்த்தருடைய நாளாய்' தேவன் பரிசுத்தப்படுத்தியபடியால், அந்த ஆசீர்வதிக்கப்பட்ட நாளை வெயிலோ அல்லது குளிரோ அல்லது புயலோ நம்மை தடைசெய்து நிறுத்திவிடக் கூடாது!

2) புயலே வீசினாலும் 'என் சபை ஊழியர்' அங்கிருப்பார் என்று எதிர்பார்ப்பேன். ஊழியர் சபைக்கு வரவில்லையென்றால், "ஊழியர் சபைக்கு வரவில்லையா? இந்த புயலுக்காக ஏன் வீட்டில் தங்கிவிட்டார்?" என்ற ஆச்சரியமே எனக்கு ஏற்படும்.

3) கொடிய கால சூழ்நிலை எனக்கு போதித்ததெல்லாம் 1. என் விசுவாசம் உறுதியான கற்பாறையில் போடப்பட்டுள்ளதா? 2. நான் கிறிஸ்துவை எவ்வளவு நேசிக்கிறேன் என்பதையே, இந்த சூழ்நிலை நிரூபிக்கிறது. 3. மெய்யான அன்புக்குரியவர்கள் **'சந்திக்க நியமித்த நாளை தவறவிட மாட்டார்கள்!'** 4. எந்த சாக்குப்போக்கு சொல்லி என்னை திருப்திப்படுத்திக் கொண்டாலும், 'அவைகள்' தேவனுடைய பார்வையில் பரிசோதிக்கப்படும் என்பதை மறந்துவிடக்கூடாது! என கூறினாள்.

ஓர் கத்தோலிக்க சபையில் பியானோ வாசித்து, தான் இயற்றிய பாமாலை பாடலை 'ஓ கிறிஸ்துவே, எல்லாம் உமக்காக! ஓ கிறிஸ்துவே, உம்மாலே தான் எல்லாம்!' எனப்பாடி, இரட்சிப்பானது இயேசு வழங்கும் கிருபையினால் மாத்திரமே உண்டு என்பதை மிக எளிய முறையில் அந்த கத்தோலிக்க மக்களுக்கு மலரச் செய்தார். பாவத்தின் கொடுமை கொடியது என்பதை விளக்கி "அது தேவனுடைய ஐக்கியத்தை முறிக்கும்! பரலோக வாசலை அடைக்கும்" என்ற உண்மையை ஆணித்தரமாய் வலியுறுத்தினார். தன் 42வது வயதில் மரிக்கும்போது "நான் போவது அழகு நிறைந்தது" என்ற வார்த்தையோடு மரித்தார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## வாலிபனே, மனந்திரும்பி 'ஒளியின் இராஜ்ஜியம்' பிரவேசி!

ஒரு சமயம் ஒரு வயோதிப தேவமனிதன் மரித்துக்கொண்டிருந்தார். ஆகிலும், எந்த சலனமும் வருத்தமும் இல்லாமல் மிக அமைதியோடு கண் மூடியிருந்தார் அந்த தேவமனிதர்! அவரண்டை நின்று கொண்டிருந்த அவரின் குமாரன் "அப்பா நீங்கள் கடந்து சென்று கொண்டிருக்கும் பள்ளத்தாக்கு உங்களுக்கு முன்பாக எப்படி இருக்கின்றது?" என்று கேட்டான்.

அந்த விருத்தாப்பியன் "எந்தப் பள்ளத்தாக்கைக் குறிப்பிட்டுப் பேசுகின்றாய்?" என்று தன் மகனைக் கேட்டார்.

"மரண இருளின் பள்ளத்தாக்கின் வழியாக நீங்கள் கடந்து சென்று கொண்டிருப்பதாக டாக்டர் என்னிடம் கூறினார்" என்று மகன் பதில் கூறினான்.

"ஓ என் மகனே, தான் பேசுவது இன்னதென்று அறியாமல் அந்த டாக்டர் பேசியிருக்கின்றார். இந்த என் படுக்கையைச் சுற்றி எந்தவித இருளும் இல்லை. நான் ஒரு பள்ளத்தாக்கிலும் இருக்கவில்லை! ஒளிப்பிரளயம் நிரம்பிய மலை உச்சியில் அல்லவா நான் நின்று கொண்டிருக்கின்றேன். இன்னும் சிறிது நேரத்தில், நான் அந்த பிரகாசிக்கும் 'ஒளியின் இராஜ்ஜியத்திற்குள்' போய் விடுவேன்! இதையே என் வாழ்வின் நோக்கமாய் வைத்து வாழ்ந்தேன், ஊழியமும் செய்தேன்!" என்று கூறி மகனை அழைத்து அவனை அன்புடன் நோக்கி, "மகனே, நான் செல்லும் இடத்திற்கு நீயும் வரவேண்டும்! நீ இன்னமும் உன் பாவ வாழ்க்கையில் வாழ்கிறாய்! நான் சிறிது நேரத்தில் உன்னைவிட்டு பிரிந்து மோட்சானந்த இரட்சகரிடம் சென்று விடுவேன்! 'இன்றைக்கே உனக்கு கிருபையின் காலம்' உன்னை தாழ்த்தி மனம்திரும்பி, உன் ஆத்துமா இரட்சிக்கப்பட, இரட்சகரிடம் கேள்" எனக்கூறி மரித்தார்!

மரணத்திற்குப்பிறகு, ஓர் ஒளிமிகுந்த பேரானந்தமான இன்னொரு ஜீவியம் இருப்பதை அந்த மகன் உணர்ந்தான்! மரித்த அப்பாவின் கட்டிலருகில் முழங்கால்படியிட்டு, தன்னை அந்த நித்திய ஒளியின் ராஜ்ஜியத்திற்கு கண்ணீரோடு அர்ப்பணித்தான்!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**